7th March 1969]

அதனால் அவரை இயக்குனராகவும் செல்வி ஷர்மா அவர்களை கூடுதல் இயக்குனராகவும் வைத்திருக்கிறார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : டைரக்டர் ஆஃப் ஹெல்த் சர்வீஸஸ் நியமிக்க வேண்டுமென்று எப்போது முடிவு செய்யப்பட்டது? அதற்கான உத்தரவு எப்போது போடப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உத்தரவு போடப்பட்டது. 1—7- -1966-க்குள் இதை ஊர்ஜிதம் செய்யவேண்டுமென்று அந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்த இருவரும் முறையே Additional Director of Public Health ஆக 23—2—1968லும், Director of Health Services and Family Planning ஆக 29—2—1968-லும் பதவி ஏற்றார்கள்.

Appointment of Tamil Pandits as Headmasters

*150 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI (on behalf of Thiru D. Santosham). Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether under the present rules, First Grade Tamil Pandits without University Degree are eligible for appointment as Headmasters; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (on behalf of the Hon. the Minister for Education and Industries). (*a*) No .

(*b*) According to the existing orders, the claims of Grade I Pandits can be considered for inclusion of their names in the Panel of Headmasters of former Board High Schools, provided they possess a degree in a language or a subject under degree in teaching and five years teaching experience after obtaining the B.T. degree in recognised Secondary Schools.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்ட பிறகு, தமிழ் ஆசிரியர்கள் ஆங்கிலப் பட்டம் பெற்ற பிறகுதான் தலைமை ஆசிரியர்களுடைய பேனலில் வரலாம் என்று சொல்லப்படுகிறது. அதை நீக்கி தமிழ் ஆசிரியர்களில் முதுமைப் பணி உடையவர்களைத் தலைமை ஆசிரியர்கள் பேனலில் கொண்டுவர உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது The question of integration of the services of the staff is under the consideration of the Government and the Director considers that there is no need to consider this question at this stage.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தமிழை அரியாசனத்தில் ஏற்றி வைத்திருக்கிறோம் என்று கூறிக்கொண் டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழைப் பயின்ற

[7th March 1969

ஒருவருக்குத் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க முடியாது என்று சொல்வது சரியா? கம்பன், வள்ளுவன், ஒட்டக் கூத்தன் போன்றவர்கள் எல்லாம் இப்போது திரும்பி வந்தால் அவர்களுக்குக் கூட தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க மாட்டார்கள் போல் தெரிகிறது. ஆகவே அதை மீண்டும் பரிசீலனை செய்து தமிழுக்கு உரிய இடத்தை வெளியிலே அவர்கள் பேசுவதைப் போன்று தருவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி கொடுப்பதில் இந்த அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் விதிமுறைகள் குறுக்கே இருக்கின்றன. அதைப்பற்றி ஆராய முயற்சி எடுக்கப்படுகிறது.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: எல்.டி., பி.டி. படித்த பிறகு 5 வருஷம் கழித்துத்தான் தலைமையாசிரியர் பதவி கொடுக்கவேண்டுமென்று சொல்லியதை சர்க்கார் ஏற்கனவே ஆலோசித்தது. இப்போது ஐந்து வருஷ நிபந்தனையை எடுக்க ஏதாவது ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: ஏற்கனவே குறிப்பிட்டது போல The request was that five years' of teaching experience after obtaining the B.T. Degree need not be insisted upon. As the question of integration of the services of the staff is under consideration of the Government, the Director considered that there was no need to consider this question at this stage.

Teachers of Madurai Municipality

* 151 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Madurai Municipality has given effect to G.O. Ms. No. 1355, Education, dated 3rd August 1967;

(*b*) if so, from what date; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. THIRU S. J. SADIQ PASHA (on behalf of the Hon. the Minister for Education and Industries): (*a*) Yes.

(*b*) 39 posts sanctioned were utilised on 5th February 1968 and 17 posts were utilised on 18th March 1968.

(*c*) Does not arise.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: இந்த சபையில் இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு 3—8—1967-லிருந்து கொடுக்கலாம் என்ற சலுகையை சர்க்கார் ரொம்ப இரக்கத்துடன் ஏற்றுக்கொண்டதால் உதவிபெறும் பள்ளிகளில் அந்தச் சலுகையை வாங்குகிறார்கள். தஞ்சை முனிசிபாலிடியிலும் இன்றைய தினம் செகண்டரி